எனது இல. 2/SEC/49
கல்வி அமைச்சு,
மலே வீதி.
கொழும்பு 2.
23.07.1982

கல்வி பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
பிரதான கல்வி அதிகாரிகளுக்கும்,

**பாடசாலை கல்விச் சுற்றுலா**

பாடசாலை கல்விச் சுற்றுலா பாடவிதானத்துக்குட்பட்ட முக்கியமான ஒரு கூறாகும். எனவே பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி அவ்வாறான கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கமைப்பது முக்கியமாகும். ஆகையால் அவ்வாறான கல்விச் சுற்றுலாக்களை மேற்கொள்கையில் பின்வரும் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டப்படுகின்றீர்கள்.

i) உங்கள் அனுமதியின்றி கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கமைப்பது கூடாது.

ii) வெளியே சென்று தங்குவதற்குப் பொருத்தமான இடம் ஏற்பாடு செய்யப்படாதவிடத்து பாடசாலை மாணவர்கள் இரவில் தங்கும் எண்ணம் கல்விச் சுற்றுலாக்கள் ஒழுங்கமைக்கப்படக் கூடாது.

iii) கல்விச் சுற்றுலாவில் பங்குகொள்ளும் மாணவர்களின் பெற்றோர்களின் விருப்பத்தை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலும் அத்தகைய கல்விச் சுற்றுலாக்களில் பெற்றோரில் சிலரை கலந்து கொள்ளச் செய்ய முடியுமானால் சிறந்தது.

iv) கல்விச் சுற்றுலாக்களின் பொருட்டு பாடசாலைகளுக்கு லீவு விடப்படக்கூடாது. மாறாக கல்விச் சுற்றுலாக்கள் வார இறுதி நாட்களையும் லீவு காலங்களையும் மட்டும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

v) கல்விச் சுற்றுலாக்களின் போது ஏதாவது எதிர்பாராத சிக்கல்கள் தோன்றுமாயின் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தற்கு தெரியப்படுத்தி உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

vi) கல்விச் சுற்றுலா செல்வதற்கான விண்ணப்பங்கள் உங்கள் பிரதேச கல்விப் பணிப்பாளரூடாக அனுமதிக்காக அனுப்பப்படல் வேண்டும்.

vii) அத்தகைய விண்ணப்பமொன்று பின்வரும் விடயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. பாடசாலையின் பெயர்

ஆ. விஜயம் மேற்கொள்ளவுள்ள இடங்கள், அங்கு செல்ல உத்தேசித்துள்ள நேரம், அங்கிருந்து புறப்படும் நேரம், உத்தேச சுற்றுலாப் பயணப் பாதையை காட்டும் படம் தூரம் என்பன

இ. பெற்றோரின் விருப்பம் பெறப்பட்டுள்ளதா என்பது

ஈ. சுற்றுலா தொடங்கும் திகதியும் நேரமும், திரும்பி வரும் திகதியும் நேரமும், புறப்படும் நேரமும் திரும்பிவரும் நேரமும் பாடசாலை வேளையைவிட முந்தியோ பிந்தியோ அமையுமானால், பிள்ளைகள் சுற்றுலாவில் புறப்பட உத்திதேசித்துள்ள இடத்திற்கு வீட்டிலிருந்து எங்ஙனம் வந்து சேருவார்கள் என்பதும் அது போன்று திரும்பி வரும்போது எங்ஙனம் வீடு திரும்புவார்ள் என்பதும்.

உ. கல்விச் சுற்றுலாவின் போது இரவில் தங்க நேரிடுமாயின் அதற்காக செய்யப்பட்ட ஏற்பாடும் அவ்வாறு தங்குமிட வசதி ஒழுங்கு அனுமதிக்கப்பட்டதற்கான சான்றுக் கடிதமும் இருத்தல்.

ஊ. போக்குவரத்து, தனியார் வாகனமாயிருப்பின் வாகன இலக்கம், வாகனத்தின் தகுதிநிலை குறித்த சான்றிதழ் அது வழங்கப்பட்ட திகதி

எ. தனியார் வாகனமாயின் பயணிகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா அது எத்தொகைக்கு என்பதும்

ஏ. சுற்றுலாவில் செல்லும் மாணவர்கள் வகுப்பு ரீதியாகவும் பால்வாரியாகவும்

ஐ. சுற்றுலாவில் மாணவ மாணவிகள் செல்லுவார்களாயின் ஆண், பெண் தங்குவதற்கு வெவ்வேறாக வசதி செய்யப்பட்டுள்ளதா என்பது எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒ. சுற்றுலாவில் செல்லும் ஆசிரியர்களின் பெயர், வயது விஷேட தகைமை என்பவற்றை குறிப்பிடவும் இருபது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் மாணவிகள் கூட்டிச் செல்லப்படும் போது கட்டாயமாக பெண் ஆசிரியர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

ஓ. சுற்றுலாவின் செலவுகள் எங்ஙனம் பெறப்பட்டதென்றும் உத்தேச வரவு செலவுத் திட்டமும் காட்டப்படல் வேண்டும்.

viii) கல்விச் சுற்றுலாவிற்கு அனுமதி வழங்குமுன் நீங்கள் பின்வருவன தொடர்பாக தனிப்பட்ட வகையில் திருப்தி அடைந்திருக்க வேண்டும்.

அ. அச்சுற்றுலா பிள்ளைகளுக்கு பிரயோசனமுடையது

ஆ. பிள்ளைகளின் பாதுகாப்பு, ஏனைய வசதி குறித்து போதுமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இ. காட்டப்பட்டுள்ள பயணப் பாதையின்படி பிரயாணங்கள் பகல் வேளைக்குள் மேற்கொள்ள கூடியதென்றும் இரவில் பயணம் செய்யத் தேவையிருக்காது என்றும்

ஈ. சுற்றுலாவின் பொருட்டு பணம் சரியான முறையில், சரியான அளவில் பயன்படுத்தப்படுகின்றது என்று

ix) சுற்றுலா முடிவடைந்தவுடன் அது பற்றி அதிபர் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

x) சுற்றுலா முடிவடைந்து ஒரு வாரத்துக்குள் அக்கல்விச் சுற்றுலாவின் நோக்கம் நிறைவேற்றப் பட்டுள்ளதா என்றும் அவை யாவையென்றும், விரிவான அறிக்கையொன்று கல்விப் பணிப்பாளருக்கு அதிபரால் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

1954ம் ஆண்டை 28ம் இலக்க சுற்று நிருபமும் 1973.10.17இல் வெளியிட்ட சுற்று நிருப கடிதமும் இத்தால் ரத்துச் செய்யப்படுகிறது.

செயலாளர்
கல்வி அமைச்சு